### தவத்திரு பொன்னம்பல அடிகளாரால் எழுப்பப்பட்ட அருளாலயம்!

# பாமர மக்களையும் தமிழ் பருக வைத்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்!

## குன்றக்குடியில் ‘அருளாலயம்’ திருக்குட நன்னீராட்டு விழா —

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி! - அமைச்சர் பி.கே.சேகர்பாபு விழா மேடையில் வாசித்தார்!

சென்னை, செப்.13–

**குன்றக்குடியில் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களால் ‘அருளாலயம்’ எழுப்பப்பட்டு அதற்குத் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறுவதை அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்து செய்தியில், பாமர மக்களையும் தமிழ் பருக வைத்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார். இவ்வாழ்த்து செய்தியை விழா மேடையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாசித்தார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

அருள்நெறித் தந்தை, தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்குக் குன்றக்குடியில், தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களால் அருளாலயம் எழுப்பப்பட்டு அதற்குத் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறுவதை அறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறேன். இதனை முன்னிட்டு செப்டம்பர் 12ஆம் நாள் முதல் 14ஆம் நாள் வரை மூன்று நாட்கள் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுவது மேலும் சிறப்பு.

குன்றக்குடி அடிகளார் அவர்களின் தாடி தவம் சொல்லும்; தாழ்ந்த சடை அறிவு சொல்லும், ஒடிப்படர்ந்த நரை ஒவ்வொன்றும் தமிழ் சொல்லும்! அவர் ஒரு மடாதிபதியாக மட்டுமின்றி, மாபெரும் சிந்தனையாளராக, சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்புபவராக, சமூக மேம்பாட்டுக்கான ஆக்கரீதியான தொண்டுகளை ஓய்வின்றிச் செய்பவராகத் திகழ்ந்து வந்தார். “கோவிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோவிலும்” என்ற முழக்கத்துடன் அவர் மேற்கொண்ட உழவாரப் பணி, கோவில்களின் சுற்றுப் புறத்தை மட்டுமின்றி, சிவகங்கை மாவட்டத்தின் எண்ணற்ற கிராமங்களின் தெருக்களையும், நீர்நிலைகளையும் தூய்மைப்படுத்திப் புத்தியிரூட்டியது. குன்றக்குடியை நாட்டுக்கே மாதிரி கிராமமாக வடிவமைத்துக் காட்டிய சாதனையாளர் அவர்! “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற திருநாவுக்கரசரின் வரிகளையே வாழ்க்கை முறையாகக் கொண்டிருந்தவர்! தஞ்சை மண்ணில் உள்ள மாயூரத்தில் பிறந்து செட்டிநாட்டு மண்ணில் சிந்தனை நந்தவனம் வளர்க்க வந்த செம்மல்!

**உண்மையான புரட்சித் துறவி!**

காகிதத் தொழிற்சாலைப் பணி, தொடக்கப்பள்ளி ஆசிரியர் பணி, தருமபுரம் ஆதினத்தில் எழுத்தர் பணி என வாழ்வைத் தொடங்கிய அடிகளாரை, அவருக்குள் இருந்த இயல்பான அறிவாற்றலின் உந்துதல், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினத்தின் 45ஆவது குருமகா சந்நிதானம் என்ற அரியணையில் அமரவைத்து அழகு பார்த்தது. 1951ஆம் ஆண்டு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினத்தின் குருமகா சந்நிதானமாக அவர் பதவியேற்ற விழாவை, தீண்டாமை விலக்கு விழாவாக நடத்திய உண்மையான புரட்சித் துறவி அவர்!

இரா.பி.சேதுப்பிள்ளை, தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என, அவரது சமகாலத்தில் தத்துவத்தால், தமிழால் மூத்த ஆளுமைகள் அனைவருடனும் தொடர்புடன் இருந்தவர். அவர்களது உயரிய கருத்துகளை உள்வாங்கி, செயல் திட்டங்களாகச் செதுக்கிக் கொண்டவர்! அவர் ஏற்றுக்கொண்ட சைவ நெறியை, சமூகத்தின் ஒற்றுமைக்கும், உயர்வுக்குமான கருவியாகக் கையாண்ட பெருந்தகை!

**இலக்கிய விழாக்களில் ஈடுபாடு கொண்டவர்!**

தமிழின் ஆகச்சிறந்த சொல்லாடல் வடிவமாக பட்டிமன்றத்தை வடிவமைத்து, அதனைப் பட்டிதொட்டி எங்கும் பரப்பி, பாமர மக்களையும் தமிழ் பருக வைத்தவர். காரைக்குடி கம்பன் விழா என்றால் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நினைவு கட்டாயம் வரும். அந்த அளவுக்கு இலக்கிய விழாக்களில் ஈடுபாடு காட்டியவர். மேடைத் தமிழின் மெல்லிய தென்றலாகத் தமிழ் மக்களின் சிந்தையில் தவழ்ந்த தவமுனி அவர்! பேச்சில் மட்டுமின்றி, எழுத்திலும் சிறந்து விளங்கியவர். தமது சிந்தனைக் கருவூலத்தை எண்ணற்ற நூல்களாக வடித்துக் கொடுத்தவர். இத்தனை சிறப்புமிக்க தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு ஆலயம் எழுப்பப்படுவது பெருமகிழ்ச்சி!

தமிழுக்கு எடுக்கப்படும் ஆலயமான அடிகளாரின் அருளாலய நன்னீராட்டு விழா சிறக்க வாழ்த்துகள்! குன்றக்குடி அடிகளாரின் புகழ் என்றென்றும் குன்றிலிட்ட விளக்காய் ஒளிரட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

---

### அமைச்சர் – முனைவர் கோவி. செழியன் தலைமை! க.அன்பழகன் – சு.கல்யாணசுந்தரம் முன்னிலை!

# முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி பிறந்தநாள் விழா - பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – ஐ.பெரியசாமி – எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

தஞ்சை, செப்.13–

சோழ மண்டல கழகக் காவலரும் முன்னாள் அமைச்சருமான கோ.சி.மணி அவர்களின் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (13.9.2025) சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் ஆடுதுறை வீரசோழன் கோ.சி.மணி திருமண மண்டப வளாகத்தில் நடைபெறுகிறது.

இப்பொதுக் கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம் வரவேற்புரையாற்றுகிறார். உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் இக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார். திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் சுந்தர.ஜெயபால் முகவுரை ஆற்றுகிறார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் க.அன்பழகன் எம்.எல்.ஏ., மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம், கோ.கா அண்ணாதுரை, சி.அம்பிகாபதி, உள்ளூர் ச.கணேசன், மிசா.எம்.மனோகரன், இர. உதயச்சந்திரன், எஸ்.கே. முத்து செல்வம், க.நசீர் முகமது, ஜெ.சுதாகர் சா.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர் செல்வம், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், முன்னாள் எம்.பி. மு.சண்முகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர்கள் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன், தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டி.பழனிவேல், டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., க.அண்ணாதுரை எம்.எல்.ஏ., என்.அசோக்குமார் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., சி.இறைவன், து.செல்வம், சண் ராமநாதன், சு.ப.தமிழழகன், டி.புண்ணியமூர்த்தி, மு.மேத்தா, டாக்டர் அஞ்சுகம் பூபதி மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், தலைமைக் கழக பேச்சாளர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக பேரூர் கழகச் செயலாளர் கோ.சி.இளங்கோவன் நன்றி கூறுகிறார்.

---

### துணைத் தலைவர் இமையம், உறுப்பினர் முனைவர் சு.ஆனந்தராஜா அமர்வு விசாரித்து

# குமரி - சுப்பிரமணியபுரம் லெ.துரைபாண்டிக்கு பழங்குடியினர் சாதிச் சான்று!

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் நடவடிக்கை!

நாகர்கோவில், செப்.13–

கன்னியாகுமரி மாவட்டம், சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த லெ.துரைப்பாண்டி என்பவர் பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் கோரி தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் ஆணையத்திடம் மனு அளித்திருந்தார்.

இந்த மனு மீது ஆணையத்தின் துணைத் தலைவர் இமையம், உறுப்பினர் முனைவர் சு.ஆனந்தராஜா தலைமையிலான இரண்டாம் அமர்வு விசாரித்து சம்பந்தப்பட்ட நபருக்கு பழங்குடியினருக்கான சாதிச் சான்றிதழ் வழங்கிட நடவடிக்கை எடுத்தனர்.

லெ.துரைபாண்டி, த/பெ. லெட்சுமணன் என்பவர் கன்னியாகுமரி மாவட்டம், தேரூர், சுப்பிரமணியபுரம் பகுதியில் வசித்து வருவதாகவும், தனது தாய்வழி சாதியான ‘இந்து காட்டுநாயக்கன்’ பழங்குடியினர் சாதிச்சான்று வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி 9.7.2022 தேதியிட்ட மனுவை ஆணையத்தில் அளித்துள்ளார்.

ஆணையத்தில் மனுதாரரின் மனுவை பரிசீலனை செய்து, மனுதாரரின் கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுத்து அறிக்கை சமர்ப்பிக்கக் கோரி அரசு கூடுதல் செயலர்/மாநில கூர்நோக்குக் குழு-II, தலைவருக்கு ஆணையத்தால் அறிவிக்கை அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில், 04.07.2025 அன்று மாநில கூர்நோக்குக் குழு-II, தலைவரிடமிருந்து கடித எண். 3901/சா.மெ 2/2019-18, நாள்: 26.6.2025 வரப்பெற்றது. அதில், மனுதாரர் லெ.துரைபாண்டி இந்து காட்டுநாயக்கன் சாதிச் சான்று பெறுவதற்காக கன்னியாகுமரி வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு விண்ணப்பித்து, விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டு, மாநில கூர்நோக்குக் குழுவிற்கு விண்ணப்பித்தது தொடர்பாக ஆய்வு செய்து, திருமதி. முத்துவளக்கொடியின் வளர்ப்பு மகனும், மருமகனுமான லெ.துரைபாண்டி என்பவருக்கு ‘இந்து காட்டுநாயக்கன்’ சாதிச் சான்று வழங்குமாறு நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு செயல்முறை ஆணை எண்.3901/சா.மெ.2/2010 நாள்: 20.5.2025-இல் ஆணையிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஆணையத்தின் நடவடிக்கையால், உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் மனுதாரருக்கு “இந்து காட்டுநாயக்கன்” பழங்குடியினர் சாதிச் சான்று 29.6.2025 அன்று நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் லெ.துரைபாண்டி 26.08.2025 தேதியிட்ட கடிதம் மூலமாக 14 வருடங்கள் போராடி வந்த தனக்கு உரிய நடவடிக்கை எடுத்து தனது கோரிக்கையை நிறைவேற்றிய ஆணையத்திற்கு நன்றிகளை தெரிவித்து, சாதிச் சான்றிதழின் நகலையும் (சாதிச் சான்றிதழ் எண். TN-5202506249689 நாள்: 19.6.2025) இணைத்து அனுப்பியுள்ளார்.

மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதால், மனுதாரரின் மனு மீதான விசாரணை இத்துடன் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

---



காஞ்சிபுரம் மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர் திருமதி மல்லிகா ராமகிருஷ்ணன் ஏற்பாட்டில் 18 ஆவது வட்டத்தில் 38. சி.சி.டி.வி. கேமராக்களை அமைச்சர் ஆர்.காந்தி, மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தனர். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், சன் பிராண்டு கே.ஆறுமுகம், மேயர் திருமதி. மகாலட்சுமி யுவராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன், பகுதி செயலாளர் கே.திலகர் வட்ட நிர்வாகிகள் சேகர் வக்கீல், எஸ்.அரவிந்த் குமார், த.குமரன் பழனிவேல் உள்ளிட்ட மாநகர பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

